# TNPSC GROUP II TEST BATCH 2024
## HOME TEST VI பொதுத்தமிழ் 1

1. பகுதி I உடன் பகுதி II ஐப் பொருத்துக:

| பகுதி I | பகுதி II |
|---|---|
| A. குறிஞ்சி | 1. நெல்லரிதல் |
| B. முல்லை | 2. கிழங்ககழ்தல் |
| C. மருதம் | 3. உப்பு விற்றல் |
| D. நெய்தல் | 4 வரகு விதைத்தல் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

2. ‘அவன் உழவன்’ – என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க:
a. தெரிநிலை வினைமுற்று b. குறிப்பு வினைமுற்று c. பெயர்ச்சொல்
d. தொழிற்பெயர் e. விடை தெரியவில்லை

3. பிழையற்ற வாக்கியத்தைத் தேர்க
a. வயலில் மாடுகள் மேந்தது b. வயலில் மாடுகள் மேஞ்சது
c. வயலில் மாடுகள் மேய்ந்தன d. வயலில் மாடுகள் மேய்ந்தது
e. விடை தெரியவில்லை

4. பொன்னியிடம் தேன்மொழி தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள் - எவ்வகைத் தொடர்?
a. நேர்க்கூற்று b. அயற்கூற்று c. எதிர்மறைக்கூற்று
d. கலவைத்தொடர் e. விடை தெரியவில்லை

5. தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இடம் பெறும் நூல் எது?
a. குறிஞ்சிப்பாட்டு b. முல்லைப்பாட்டு c. கலிப்பாடல்
d. பரிபாடல் e. விடை தெரியவில்லை

6. குமரகுருபரர் எழுதாத நூல்
a. கந்தர் கலிவெண்பா b. மதுரைக்கலம்பகம்
c. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் d. நீதிநெறி விளக்கம்
e. விடை தெரியவில்லை

7. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?
a. நற்றிணை, கலித்தொகை
b. பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி
c. குறுந்தொகை, ஐங்குறுநூறு
d. பரிபாடல், மலைபடுகடாம்
e. விடை தெரியவில்லை

8. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியைக் கூறும் நூல்
a. பெருங்கதை
b. குண்டலகேசி
c. நாககுமாரகாவியம்
d. மணிமேகலை
e. விடை தெரியவில்லை

9. பொருத்துக:

A. நான்மணிமாலை — 1. கவிதை
B. மலரும் மாலையும் — 2. சிற்றிலக்கியம்
C. நான்மணிக்கடிகை — 3. காப்பியம்
D. தேம்பாவணி — 4. நீதிநூல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

10. பொருத்தமான விடையை எழுதுக: 'துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்' –
a. அந்தகக் கவி
b. இராமச்சந்திர கவிராயர்
c. திருவள்ளுவர்
d. உடுமலை நாராயணக் கவி
e. விடை தெரியவில்லை

11. மறைமலை அடிகள் தாம் நடத்தி வந்த 'ஞானசாகரம்' இதழைத் தூய தமிழில் எங்ஙனம் பெயர் மாற்றம் செய்தார்?
a. ஞானக் கடல்
b. அறிவுக்கடல்
c. அறிவு சாகரம்
d. நானக்கடல்
e. விடை தெரியவில்லை

12. திருமணம் செல்வக் கேசவராய முதலியார் தமிழின் எப்பிரிவுக்கு மிகவும் தொண்டு செய்தார்?
a. செய்யுள்
b. உரைநடை
c. இலக்கணம்
d. நாடகம்
e. விடை தெரியவில்லை

13. பொருத்துக:

A. சிக்கனம் — 1. கவிஞர் தாரா பாரதி
B. மனிதநேயம் — 2. ஆலந்தூர் கோ. மோகனரங்கம்
C. காடு — 3. சுரதா
D. வேலைகளல்ல வேள்விகளே — 4. வாணிதாசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

14. அடைமொழிக்குரிய ஆசிரியர்களைத் தேர்க:

A. விடுதலைக்கவி — 1. அப்துல் ரகுமான்
B. திவ்வியகவி — 2. வாணிதாசன்
C. கவிஞரேறு — 3. பாரதியார்
D. கவிக்கோ — 4. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 1 | 3 | 4 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

15. வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலை இயற்றியவர் _______________.

a. திருமங்கையாழ்வார் b. திருமழிசையாழ்வார் c. குலசேகராழ்வார்
d. நம்மாழ்வார் e. விடை தெரியவில்லை

16. திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டவர்

a. பாவலரேறு பெருஞ்சித்திரனார் b. மலையத்துவம்சன் மகன் ஞானப்பிரகாசம்
c. சிவப்பிரகாசம் d. மணிவாசகர்
e. விடை தெரியவில்லை

17. ‘நெடிலோடு டுயிர்த் தொடர்க்குற் றுகரங்களுள்
பறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே’
இவ்விதிக்குச் சான்றைத் தேர்க.

a. இரட்டுற மொழிதல் b. வட்டப்பலகை c. கட்டுச்சோறு
d. காட்டுக்கோழி e. விடை தெரியவில்லை

18. தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்?

a. 40 b. 35 c. 25
d. 45 e. விடை தெரியவில்லை

19. முற்றியலுகரச் சொல்லை தேர்ந்தெடு

a. மாடு b. மூக்கு c. கதவு
d. மார்பு e. விடை தெரியவில்லை

20. ‘பெறு’ என்ற வேர்ச்சொல்லின் வினையாலனையும் பெயரைத் தேர்ந்தெடு:

a. பெற்றாள் b. பெறுவான் c. பெறுகிறான்
d. பெறுபவன் e. விடை தெரியவில்லை

21. வினைமுற்று சொல்லை தேர்ந்தெடு

a. படி b. படித்த c. படித்து
d. படித்தான் e. விடை தெரியவில்லை

22. இப்போதுள்ள கல்வெட்டுகளிலேயே மிகப்பழமையானது

a. உத்திரமேரூர்க் கல்வெட்டு b. ஆதிச்சநல்லூர்க் கல்வெட்டு
c. அரியாங்குப்பம் கல்வெட்டு d. திருநாதர் குன்றம் கல்வெட்டு
e. விடை தெரியவில்லை

23. ‘கலம்பகம் பாடுவதில் புகழ் பெற்றவர்’ யாவர்?
a. இரட்டையர்  b. சமணர்  c. பரணர்
d. பௌத்தர்  e. விடை தெரியவில்லை

24. ஆன்ம ஈடேற்றத்தை விரும்பும் பயணம் குறித்த நூல்
a. இரட்சணிய யாத்திரிகம்  b. இரட்சணிய மனோகரம்
c. இரட்சணிய குறள்  d. இரட்சணிய சரிதம்
e. விடை தெரியவில்லை

25. “திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூயமொழி தமிழ்ச் செம்மொழியாம்” – என்று செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்.
a. பரிதிமாற் கலைஞர்  b. நாமக்கல் கவிஞர்  c. பாரதியார்
d. பாரதிதாசன்  e. விடை தெரியவில்லை

26. பெர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளை ஏற்று பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்த அறிஞர்
a. வேதநாயகம் பிள்ளை  b. வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
c. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை  d. ஆறுமுக நாவலர்
e. விடை தெரியவில்லை

27. ‘தாண்டக வேந்தர்’ என அழைக்கப்படுபவர் யார்?
a. சுந்தரர்  b. திருநாவுக்கரசர்  c. மாணிக்க வாசகர்
d. திருஞானசம்பந்தர்  e. விடை தெரியவில்லை

28. ‘ஆ’ – முதன் முதலில் எந்நிலத்திற்குரிய விலங்கு?
a. குறிஞ்சி  b. முல்லை  c. நெய்தல்
d. மருதம்  e. விடை தெரியவில்லை

29. இதன் பட்டையை அரைத்துத் தடவினால் முரிந்த எலும்பு விரைவில் கூடும்
a. முருங்கைப்பட்டை  b. வேப்பம் பட்டை  c. புளியம் பட்டை
d. நாவற் பட்டை  e. விடை தெரியவில்லை

30. ஆங்கிலப் பழமொழிக்குப் பொருத்தமான தமிழ்ப் பழமொழியை பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. First deserve, then desire | 1. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் |
| B. Tit for tat | 2. செய்யும் தொழிலே தெய்வம் |
| C. Work is worship | 3. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? |
| D. Little strokes fell great oaks | 4. பழிக்குப் பழி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 3 | 4 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

31. திருக்குறள், திருவாசகம், நாலடியார், ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
a. கால்டுவெல்  b. ஜி.யு.போப்  c. ஜோசப் பெஸ்கி
d. தெ நொபிலி  e. விடை தெரியவில்லை

32. பொருத்துக:

| நூல் | ஆசிரியர் |
| --- | --- |
| A. ஆசாரக் கோவை | 1. கூடலூர் கிழார் |
| B. கார்நாற்பது | 2. விளம்பி நாகனார் |
| C. முதுமொழிகாஞ்சி | 3. கண்ணன் கூத்தனார் |
| D. நான்மணிக்கடிகை | 4. பெருவாயின் முள்ளியார் |

| | A | B | C | D |
| --- | --- | --- | --- | --- |
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

33. பொருந்தாத இணையை கண்டறி:
a. சிறுபஞ்சமூலம் - காரியாசன்
b. ஞானரதம் - கல்கி
c. எழுத்து – சி.சு. செல்லப்பா
d. குயில்பாட்டு – பாரதியார்
e. விடை தெரியவில்லை

34. பாரத சக்தி மகா காவியம் இயற்றியவர்
a. சோமசுந்தர பாரதியார்
b. சுந்தானந்த பாரதியார்
c. மகாகவி பாரதியார்
d. பாரதிதாசன்
e. விடை தெரியவில்லை

35. ஒழுக்கம் ஓம்பப் படும் - இதில் பயின்று வரும் மோனைச் சொற்கள்
a. ஒழுக்கம் - ஓம்பப்
b. ஒழுக்கம் - விழுப்பம்
c. விழுப்பம் - தரலான்
d. உயிரினும் - ஓம்பப்
e. விடை தெரியவில்லை

36. மா முன் நிரையும் விள முன் நேரும் வருவது
a. வஞ்சித் தளை
b. இயற்சீர் வெண்டளை
c. வெண்சீர் வெண்டளை
d. கலித்தளை
e. விடை தெரியவில்லை

37. ‘கற்பனைக் களஞ்சியம்’ – என்று போற்றப்படுபவர்
a. தண்டபாணி தேசிகர்
b. அமிர்தகவிராயர்
c. சவ்வாதுப் புலவர்
d. சிவப்பிரகாச சுவாமிகள்
e. விடை தெரியவில்லை

38. பின்வருவனவற்றுள் எது சமண இலக்கியம் இல்லை?
a. சீவக சிந்தாமணி
b. சூளாமணி
c. குண்டலகேசி
d. நீலகேசி
e. விடை தெரியவில்லை

39. “மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் …..”
-இப்பாடல் ஆசிரியரைக் கண்டறிந்து ஏழுதுக
a. விளம்பி நாகனார்
b. சமண முனிவர்
c. முன்றுறை அரையனார்
d. நல்லாதனார்
e. விடை தெரியவில்லை

40. பின்வருவனவற்றுள் பொருந்தாத பொருள் எது?

a. புரம் - சிறந்த ஊர்
b. பாக்கம் - கடற்கரைச் சிற்றூர்
c. குப்பம் - குறிஞ்சி நில வாழ்விடம்
d. பட்டினம் - கடற்கரை நகரம்
e. விடை தெரியவில்லை

41. சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது – எனக் கூறியவர்.

a. அம்பேத்கர்
b. காந்தியடிகள்
c. ஈ.வே. ராமசாமி
d. அண்ணாதுரை
e. விடை தெரியவில்லை

42. பொருளறிந்து பொருத்துக:

| I | II |
|---|---|
| A. பிடர்தலை ஏறியவர் | 1. துர்க்கை |
| B. எழுவருள் இளையவர் | 2. பத்ரகாளி |
| C. இறைவனை நடமாடச் செய்தவர் | 3. பிடாரி |
| D. தாருகன் மார்பைப் பிளந்தவர் | 4. கொற்றவை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 4 | 3 | 2 | 1 |
| b | 3 | 4 | 1 | 2 |
| c | 4 | 3 | 1 | 2 |
| d | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

43. "மதியிலி அரசர் நின் மலரடி பணிகிலா
வானகம் ஆள்வாரே"
-இப்பாடலுக்குரிய அரசன் ________

a. இராஜராஜசோழன்
b. நந்திவர்மன்
c. நரசிம்மவர்மன்
d. சுந்தர பாண்டியன்
e. விடை தெரியவில்லை

44. விடைக் கேற்ற வினாவைத் தேர்க:
கபிலர் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்

a. இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்?
b. நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்?
c. நட்புக்கு சிறந்த புலவர் யார்?
d. நட்பு என்பது யாது?
e. விடை தெரியவில்லை

45. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு - இடம் பெற்ற நூல் எது?

a. சீவகசிந்தாமணி
b. சிலப்பதிகாரம்
c. குண்டலகேசி
d. மணிமேகலை
e. விடை தெரியவில்லை

46. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்
- என்னும் குறள் கூறும் கருத்தின் அடிப்படையில் பின்வருவனவற்றில் எதைக் குறிக்கும்?

a. மருத்துவ அறிவு
b. அணுவியல் அறிவு
c. மண்ணியல் அறிவு
d. நீரியல் அறிவு
e. விடை தெரியவில்லை


044-24339436, 42867555, 9840226187

47. “செல்வத்துப் பயனே ஈதல்” எனப் பாடியவர்
a. திருவள்ளுவர் b. நக்கீரனார் c. கபிலர்
d. ஔவையார் e. விடை தெரியவில்லை

48. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குரிய பொருந்தாதச் சொல்லைத் தேர்க
“உவமைத் தொகை”
a. தமிழன்னை b. மதிமுகம் c. மலர்ப்பாதம்
d. கல்திரள்தோள் e. விடை தெரியவில்லை

49. ‘கற்கின்றனர்’ என்னும் நிகழ்கால வினைமுற்றின் வேர்ச்சொல்
a. கற்க b. கல்வி c. கற்று
d. கல் e. விடை தெரியவில்லை

50. ஒலி வேறுபாடறிந்து சரியானப் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக
மணம் - மனம் என்ற சொல்லின் பொருள் யாது?
a. உள்ளம் - வாசனை b. எண்ணம் - இதயம்
c. வாசனை – உள்ளம் d. மணத்தல் - மானம்
e. விடை தெரியவில்லை

51. அரியவற்றுள் எல்லாம் அரிதே – பெரியாரைப்
இவ்வடியில் பயின்றுவரும் எதுகை
a. இணை எதுகை b. பொழிப்பு எதுகை c. கீழ்க்கதுவாய் எதுகை
d. மேற்கதுவாய் எதுகை e. விடை தெரியவில்லை

52. அப்பாநான் வேண்டுதலகேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாமநான் அன்புசெயல் வேண்டும்
இதில் பயின்று வரும் இயைபுச் சொற்கள்
a. அப்பா – ஆருயிர் b. அப்பா – அன்புசெயல்
c. வேண்டுதல் - வேண்டும் d. வேண்டும் – வேண்டும்
e. விடை தெரியவில்லை

53. முதன்முதலில் தமிழ்ப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டவர்
a. எல்லீஸ் துரை b. சீகன்பால்க் ஐயர் c. இரேனியுஸ் ஐயர்
d. ஜி.யூ. போப் e. விடை தெரியவில்லை

54. பொருத்துக:

| ஆசிரியர் | சிறுகதை |
|---|---|
| A. மு. வரதராசனார் | 1. மெல்ல மெல்ல மற |
| B. ஸ்ரீமதி எஸ். இலட்சுமி | 2. நன்றிப் பரிசு |
| C. நீலவன் | 3. மணம் நுகர்ந்ததற்குப் பணம் |
| D. இலட்சமி | 4. குறட்டை ஒலி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

55. "மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயும் என்றே"
இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூல்

a. சிவப்பதிகாரம் b. குண்டலகேசி c. மணிமேகலை
d. வளையாபதி e. விடை தெரியவில்லை

56. சொல்லுக்கேற்ற பொருளை பொருத்துக:

A. அம்பி 1. குஞ்சி
B. அல் 2. பறை
C. துடி 3. இருள்
D. தலைமுடி 4. படகு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 4 | 3 | 2 | 1 |
| b | 1 | 2 | 3 | 4 |
| c | 2 | 3 | 4 | 1 |
| d | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

57. சரியானவற்றைத் தேர்க:

| உரிப்பொருள் | திணை |
|---|---|
| 1. ஊடலும் ஊடல் நிமித்தமும் | - மருதம் |
| 2. பிரிதலும் பிரிதல் நிமித்தமும் | - முல்லை |
| 3. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் | - நெய்தல் |
| 4. இருத்தலும் இருத்தல் நிமித்தமும் | - பாலை |

a. 2 – ம் 3 - ம் சரி b. 1 – ம் 2 – ம் சரி
c. 1 – ம் 3 – ம் சரி d. 3 – ம் 4 – ம் சரி
e. விடை தெரியவில்லை

58. சரியானவற்றைத் தேர்க:

| தெய்வம் | திணை |
|---|---|
| 1. முருகன் | - குறிஞ்சி |
| 2. இந்திரன் | - மருதம் |
| 3. துர்க்கை | - நெய்தல் |
| 4. திருமால் | - பாலை |

a. 2 – ம் 3 - ம் சரி b. 1 – ம் 2 – ம் சரி
c. 2 – ம் 4 – ம் சரி d. 1 – ம் 4 – ம் சரி
e. விடை தெரியவில்லை

59. பின்வருவனவற்றுள் எது பொருந்தாதது?

a. நாககுமார காவியம் b. உதயண குமார காவியம் c. குண்டலகேசி
d. நீலகேசி e. விடை தெரியவில்லை

60. பொருளறிந்து பொருத்துக

| சொல் | பொருள் |
|---|---|
| A. கலாபம் | 1. கிளி |
| B. விவேகன் | 2. பொய்கை |
| C. வாவி | 3. ஞானி |
| D. அஞ்சுகம் | 4. தோகை |

 044-24339436, 42867555, 9840226187

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 2 | 3 | 1 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

61. ஒலி வேறுபாடறிந்து சரியானப் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அறை – அரை என்ற சொல்லின் பொருள் யாது?
a. கட்டடப்பகுதி – ஒன்றில் பாதி
b. காலியானப்பகுதி – கட்டடப்பகுதி
c. ஒரு பொருளின் பாதி – ஓர் அறையின் பகுதி
d. ஒன்றில் பாதி – கட்டடப்பகுதி
e. விடை தெரியவில்லை

62. அகர வரிசைப்படி தேர்ந்தெடுத்து எழுதுக
a. பிட்டு, பூட்டு, பொன், பெண், பாட்டு
b. பூட்டு, பாட்டு, பிட்டு, பெண், பொன்
c. பாட்டு, பிட்டு, பூட்டு, பெண், பொன்
d. பொன், பெண், பாட்டு, பிட்டு, பூட்டு
e. விடை தெரியவில்லை

63. ‘உதவு’ – என்ற சொல்லின் சரியான பொருள் உணர்த்தும் சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக
a. உழைப்பின்றி உயர்வில்லை
b. உயர்ந்தோரை உலக மதிக்கும்
c. உயர்வே மதிப்பைத் தரும்
d. உயர்ந்தோர் உதவும் உள்ளம் கொண்டவர்
e. விடை தெரியவில்லை

64. கீழே காணப்பெறுவனவற்றுள் பொருத்தமற்றதைத் தெரிவு செய்க:
a. சமரச சன்மார்க்கம் எனும் விரிந்த நோக்கினைக் கொண்டவர் தாயுமானவர்
b. தமிழ்மொழியின் உபநிடதம் என்று போற்றப்படுவது தாயுமானவரது பாடல்கள் ஆகும்
c. ஆன்மநேய ஒருமைப்பாட்டை வள்ளலாரிடம் இருந்து கற்றறிந்தவர் தாயுமானவர்
d. பராபரக் கண்ணிகள் தாயுமானவரால் இயற்றப்பட்டவை
e. விடை தெரியவில்லை

65. ‘காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள்’ என்று அழைக்கப்பட்டவர் யார்?
a. அம்புஜத்தம்மாள்
b. தில்லையாடி வள்ளியம்மை
c. அஞ்சலையம்மாள்
d. வேலு நாச்சியார்
e. விடை தெரியவில்லை

66. ‘தொண்டர்சீர் பரவுவார்’ என்று போற்றப்படுபவர்
a. சுந்தரர்
b. கம்பர்
c. சேக்கிழார்
d. மாணிக்கவாசகர்
e. விடை தெரியவில்லை

67. புகைப்பழக்கத்தைக் கதைக்கருவாகக் கொண்ட ‘மெல்ல மெல்ல மற’ என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

a. இலட்சுமி
b. சுஜாதா
c. சுபா
d. தாமரை
e. விடை தெரியவில்லை

68. ‘மணநூல்’ இந்நூலின் ஆசிரியர் யார்?

a. இளங்கோவடிகள்
b. சீத்தலைச் சாத்தனார்
c. திருத்தக்க தேவர்
d. திருவள்ளுவர்
e. விடை தெரியவில்லை

69. திருவிளையாடல் புராணம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?

I. மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் செய்த அறுபத்து மூன்று திருவிளையாடல்களை விளக்கிக் கூறும் பழைய வரலாற்று நூல் ‘திருவிளையாடல் புராணம்.

II. திருவிளையாடல் புராணத்தைப் பாடிய பரஞ்சோதி முனிவர் வடமொழியையும், தமிழையும் நன்கு கற்றுணர்ந்த சான்றோர்

III. திருவிளையாடல் புராணம், மதுரைக்காண்டம், கூடல் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது

IV. திருவிளையாடல் புராணத்தில் அறுபத்தைந்து படலங்களும் மூவாயிரத்து இருநூறு பாடல்களும் உள்ளன.

a. I மற்றும் III சரியானவை
b. II மற்றும் III சரியானவை
c. III மற்றும் IV சரியானவை
d. I மற்றும் IV சரியானவை
e. விடை தெரியவில்லை

70. பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| A. தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்தியங்குவது | 1. தண்டியலங்கார மேற்கோள் |
| B. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே | 2. கிரௌல் |
| C. தன்னேரில்லாத தமிழ் | 3. கால்டுவெல் |
| D. தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது | 4. தொல்காப்பியம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

71. பொருத்துக:

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| A. சிறுபாணாற்றுப்படை | 1. முடத்தாமக்கண்ணியார் |
| B. திருமுருகாற்றுப்படை | 2. நல்லூர் நத்தத்தனார் |
| C. பொருநராற்றுப்படை | 3. கடியலூர் உருத்திரங் கண்ணனார் |
| D. பெரும்பாணாற்றுப்படை | 4. நக்கீரர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

72. தமிழார்வத்தின் காரணமாகத் தம் பெயரை 'பரிதிமாற்கலைஞர்' என மாற்றி அமைத்துக் கொண்டவர்
a. மறைமலையடிகள்
b. சூரிய நாராயண சாஸ்திரி
c. ரா. இராகவையங்கார்
d. சிங்கார வேலு முதலியார்
e. விடை தெரியவில்லை

73. 'அம்மானை' பற்றிய கீழ்கண்ட கூற்றுகளில் சாரியானவை எவை?
I. அம்மானை என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று
II. அம்மானை ஆடும்போது மகளிர் பாடும் பாட்டுக்கு 'அம்மானை வரி' என்பது பெயர்
III. பாடிக் கொண்டே பந்துகளை உருட்டி விளையாடுவது 'பந்து விளையாடல்' ஆகும்.
IV. அம்மானைப் பாடலில் ஒரு கருத்து, வினா எழுப்பி அக்கருத்தை மறுத்தல், இரண்டுக்கும் பொருந்தும் வகையில் ஒரு செய்தி, முடிவில் ஒரு நீதி இடம் பெறும்
a. I மற்றும் III
b. II மற்றும் I
c. III மற்றும் IV
d. IV மற்றும் I
e. விடை தெரியவில்லை

74. 'புனையா ஓவியம்' என்பதன் பொருள்
a. வண்ணம் தீட்டப்பட்ட ஓவியம்
b. பூக்களால் வரைவது
c. மூலிகைகளால் தீட்டப்பட்ட ஓவியம்
d. கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவது
e. விடை தெரியவில்லை

75. 'ஏலாதி' பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?
I. பாடல்தோறும் ஆறு கருத்துகளை விளக்கிக் கூறும் அற இலக்கியம்,'ஏலாதி'
II. 'ஏலாதி' நூல் தற்சிறப்புப்பாயிரம், சிறப்புப்பாயிரம் உட்பட நூறு செய்யுட்களைக் கொண்டது
III. ஏலக்காய், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து உடல்பிணி போக்கி நலம் செய்யும்
IV. அதுபோல் ஏலாதியில் ஒவ்வொரு செய்யுளிலும் சொல்லப்பட்ட எட்டு கருத்துகளும் மக்களது மனநோயாகிய அறியாமையைப் போக்கித் தெளிவு தருவன.
a. II மற்றும் III
b. III மற்றும் IV
c. I மற்றும் III
d. I மற்றும் IV
e. விடை தெரியவில்லை

76. 'மயங்கி மறுகிற் பிணங்கி வணங்கி
உயங்கி யொருவர்க் கொருவர்'–
இப்பாடலடியின் ஆசிரியர் யார்?
a. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
b. கம்பர்
c. குமரகுருபரர்
d. ஒட்டக்கூத்தர்
e. விடை தெரியவில்லை

77. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக: தத்தை, சுகம், வெற்பு, கிள்ளை

a. சுகம் b. கிள்ளை c. வெற்பு
d. தத்தை e. விடை தெரியவில்லை

78. பொருத்துக:

A. ஆய்தக் குறுக்கம் 1. வெளவால்
B. ஐகாரக் குறுக்கம் 2. மருண்ம்
C. ஒளகாரக் குறுக்கம் 3. கஃறீது
D. மகரக் குறுக்கம் 4. கடலை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 3 | 2 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

79. ‘முத்தொள்ளாயிரம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைச் சுட்டுக:

a. முத்தொள்ளாயிரப் பாடல்களில் ‘புறத்திரட்டு’ என்னும் நூலின் வாயிலாக 108 வெண்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
b. பழைய உரைநூல்களில் மேற்கோளாக 22 பாடல்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.
c. பழந்தமிழர் பண்பாடு, தமிழக மூவேந்தர்கள், அவர்தம் படைகள், வீரர்கள், போரியல் முறைகள் சொல்லப்பட்டுள்ளன.
d. சுவை மிகுந்த விருத்தப்பாக்கள் கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.
e. விடை தெரியவில்லை

80. ‘நாடக இயல்’ எனம் நூலை இயற்றியவர் யார்?

a. பரிதிமாற் கலைஞர் b. பம்மல் சம்மந்த முதலியார்
c. கிருஷ்ணசாமிப் பாவலர் d. விபுலானந்த அடிகள்
e. விடை தெரியவில்லை

81. ‘எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்’ இந்த அடியில் அமைந்துள்ள மோனை வகையைத் தேர்ந்தெடு:

a. கீழ்க்கதுவாய் b. இணை c. கூழை
d. மேற்கதுவாய் e. விடை தெரியவில்லை

82. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் எங்குள்ளது?

a. புதுக்கோட்டை b. திருப்பெருந்துறை c. திருவெண்ணெய் நல்லூர்
d. பெரியகுளம் e. விடை தெரியவில்லை

83. ‘திரிகடுகம்’ பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.

a. திரிகடுகம் நூற்று இரண்டு வெண்பாக்களைக் கொண்டது
b. திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்
c. திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
d. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

84. பாந்தள், உரகம், பன்னகம், பணி என்னும் சொற்களின் பொருள் _________ என்பதாகும்.
a. கரடி b. யானை c. முதலை
d. பாம்பு e. விடை தெரியவில்லை

85. சரியான சொற்றொடரைக் தேர்க:
a. தாழ்வு உயர்வு கருதல் பிறப்பில் தவறு
b. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் தவறு
c. பிறப்பில் உயர்வு கருதல் தாழ்வு தவறு
d. உயர்வு கருதல் பிறப்பில் தாழ்வு தவறு
e. விடை தெரியவில்லை

86. ஒலி வேறுபாடறிந்து பொருத்துக:

| | |
|---|---|
| A. வலை | 1. பொந்து |
| B. வளை | 2. மீன்வகை |
| C. வாளை | 3. மரவகை |
| D. வாழை | 4. மீன்பிடி வலை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 2 | 3 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

87. நபிகள் நாயகத்தின் திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தவர் யார்?
a. பனூ அகமது மரக்காயர் b. சீதக்காதி
c. உமறு புலவர் d. செய்கு அப்துல் காதிர் மரைக்காயர்
e. விடை தெரியவில்லை

88. பொருத்துக

| பட்டியல் I<br>சொல் | பட்டியல் II<br>பொருள் |
|---|---|
| A. தேநீர் | 1. மூன்று நாள் |
| B. முந்நாள் | 2. தேன்போலும் இனிய நீர் |
| C. தேனீர் | 3. முந்தைய நாள் |
| D. முன்னாள் | 4. தேயிலை நீர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

89. மதுரக் காஞ்சியின் சிறப்புகளைத் தேர்க:
I. மதுரையைப் பாடுவது
II. நிலையாமையைக் கூறுவது
III. பத்துப்பாட்டுள் மிகுதியான அடிகளை உடையது
a. II, III சரி I தவறு b. I, II, III சரி c. I, II சரி III தவறு
d. I, III சரி II தவறு e. விடை தெரியவில்லை

90. பொருத்துக

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| A. ஏற்றப்பாட்டு | 1. ஒருவகை மீன் |
| B. நாரை | 2. நீர் நிலை |
| C. குறவை | 3. நீர் இறைக்கும் போது பாடும் பாட்டு |
| D. குளம் | 4. கொக்கு வகை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 4 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

91. பிரித்தெழுதுக:
நாத்தொலைவில்லை
a. நா + தொலைவில்லை
b. நாத்தொலைவு + இல்லை
c. நா + தொலை + இல்லை
d. நா + தொலைவு + இல்லை
e. விடை தெரியவில்லை

92. 'கொள்' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று
a. கொண்டான்
b. கொள்க
c. கொண்ட
d. கொண்டு
e. விடை தெரியவில்லை

93. பின்வருவனவற்றுள் தவறான இணையைச் சுட்டுக:
a. சிறிது × பெரிது
b. திண்ணிது × வலிது
c. உயர்வு × தாழ்வு
d. நன்று × தீது
e. விடை தெரியவில்லை

94. 'தமிழ்க்கவிஞர்களின் இளவரசன்' என்று புகழப்படுபவர்
a. இளங்கோவடிகள்
b. வாணிதாசன்
c. கண்ணதாசன்
d. திருத்தக்க தேவர்
e. விடை தெரியவில்லை

95. வினைமுற்று, பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இவற்றினைப் பயனிலையாகக் கொண்டு முடிவது?
a. நான்காம் வேற்றுமை
b. இரண்டாம் வேற்றுமை
c. முதல் வேற்றுமை
d. ஆறாம் வேற்றுமை
e. விடை தெரியவில்லை

96. கீழ்க்காணும் 'வல்லினம் மிகும் இடம்'
குறித்த கூற்றில் பிழையான கூற்றைத் தேர்ந்தெடுக்க:
a. அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்
b. ஓரெழுத்து ஒரு மொழியில் வரும் வல்லினம் மிகும்
c. உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்
d. சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்
e. விடை தெரியவில்லை

97. ‘சேர்’ என்னும் வேர்ச்சொல்லின் பெயரெச்சம்

a. சேர்ந்து b. சேர்க c. சேர்ந்த
d. சேர்ந்தது e. விடை தெரியவில்லை

98. பொருந்தாத விடையைக் கண்டறிக:
சுந்தர ராமசாமி எழுதிய நாவல்கள்

a. புளியமரத்தின் கதை b. பஞ்சும் பசியும்
c. ஜே.ஜே. சில குறிப்புகள் d. குழந்தைகள் ஆண்கள் பெண்கள்
e. விடை தெரியவில்லை

99. பொருந்தா இணையினைக் காண்க?

a. பைங்கூழ் வளர்ந்தது – காரியவாகு பெயர்
b. கார் அறுத்தான் - காலவாகுபெயர்
c. முல்லையைத் தொடுத்தார் - சினையாகுபெயர்
d. மஞ்சள் பூசினாள் - பண்பாகு பெயர்

100. பிரித்து எழுதுக: குறுகினன்

a. குறு + இன் + அன் b. குறுகி + இன் + அன்
c. குறுகு + இன் + அன் d. குறுக்கி + இன் + அன்

APOLLO STUDY CENTRE




APTI STUDY CENTRE